DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.94/2025

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | சிவராஜ் (Lw - 1) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர் இல்லை **BNSS** பிரிவு **355-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)**

முதல் விசாரணை **Date : 24.03.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், நாமகிரிபேட்டை காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் முதுநிலை காவலராக பணிபுரிந்தபோது கடந்த 23.02.2025ம் தேதி காவல் ஆய்வாளர் திரு.சங்கரபாண்டியன் அவர்களின் வாய்மொழி உத்தரவுபடி நானும் 671 முதுநிலை காவலர் திரு.பாஸ்கர் ஆகியோர் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு நடவடிக்கையாக ரோந்து பணியில் இருந்தோம். செங்கரை காவல்நிலைய சரகம் பைல்நாடு பகுதியில் சென்றபோது எங்களுக்கு கிடைத்த தகவளின் படி காலை 08.00 மணியளவில் பைல்நாடு நவக்காடு தோட்டத்து வளவு ஜெகநாதன் என்பவரது வீட்டின் அருகே கண்காணித்தபோது சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் சந்தேகப்படும் வகையில் கையில் பிராந்திபாட்டில் உடன் நின்று கொண்டிருந்தார். எதிரியை எனக்கு அடையாளம் தெரியும் அவர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை.

எதிரியை நாங்கள் பிடித்து விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் ஜெகநாதன் த.பெ.சின்னையன் என்றும் தான் சட்டத்திற்கு புறம்பாக அரசு மதுபானத்தை

விற்பனைக்கு வைத்துள்ளதாக கூறினார். எதிரி தன் வைத்திருந்த வெள்ளைநிறம் கொண்டு கட்டை பையை ஆய்வு செய்தபோது அதில் தலா 180 ML அளவுள்ள Monitor Brandy மதுபானம் 28 பாட்டில்கள் இருந்தது. எதிரி அவற்றை விற்பனைக்காக வைத்திருப்பதாக கூறினார். அதனால் எதிரி மற்றும் அவர் வைத்திருந்த மதுபானம் இருந்த பாட்டில்களுடன் நிலையம் வந்து தனியறிக்கையுடன் எதிரி மற்றும் அவர் வைத்திருந்த மதுபானத்தை பெண் தலைமை காவலர் திருமதி.பவளக்கொடியிடம் ஒப்படைத்தேன். **(**தனி அறிக்கை அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** தலைமை காவலர் சம்பவம் தொடர்பாக நிலைய குற்ற எண்.56/2025 சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்.

வழக்கை காவல் ஆய்வாளர் தன்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 14.00 மணிக்கு எதிரியை நிலையத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்தும் பின்னர் என் முன்னிலையிலும் முதுநிலை காவலர் திரு.பாஸ்கர் என்பவர் முன்னிலையிலும் 14.10 மணிக்கு எதிரியை விசாரித்தபோது அவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் ஆய்வாளர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை நான் மற்றும் திரு.பாஸ்கர் முன்னிலையில் காவல் ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்தார்.

எதிரி ஜெகநாதன் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் அரசு மதுபானத்தை விலைக்கு வாங்கி அதை அதிக விலைக்கு அங்கு வரும் நபர்களுக்கு விற்பனைக்கு வைத்திருந்ததாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். (ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் மட்டும் அ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்னர் எதிரி விற்பனைக்காக வைத்திருந்த தலா 180 ML அளவுள்ள Monitor Brandy மதுபானம் 28 பாட்டில்கள் அஜர் செய்தார். அதை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **(**கைப்பற்றுதல் மகஜர் அ**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** எதிரியை அவர் வெள்ளைநிறம் கொண்ட கட்டை பையை மதுபான பாட்டில்களுடன் திரு.பாஸ்கர் அவர்கள் எனது செல்போனில் புகைப்படம் எடுத்தார். **(**புகைப்படம் அ**.**சா**.**ஆ**.4** ஆகவும்**,** பிரிவு **63(4) (C) BSA** சான்றிதழ் அ**.**சா**.**ஆ**.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.)**

பின்னர் ஆய்வாளர் உடன் 23.02.2025ம் தேதி நானும் முதல்நிலை காவலர் திரு.பாஸ்கர் சம்பவ இடம் சென்றோம். 17.00 மணிக்கு ஆய்வாளர் பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **(**பார்வை மகஜர் அ**.**சா**.**ஆ**.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் சுமார் 200 – 300 மீட்டருக்குள் சுமார் 20 - 30 வீடுகள் இருக்கும் என்றால் இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அருகில் உள்ள வீடுகளில் வசிப்பவர்களை எதிரி அரசு மதுபானங்களை உரிமம் இன்றி விற்பனை செய்கிறாரா என்பது பற்றி விசாரித்து தெரிந்து கொண்டோமா என்றால் இல்லை. எதிரி செங்கரை அரசு மதுபான கடைகளில் மது வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில் அந்த மதுபான கடையில் எதிரிதான் மதுபானத்தை வாங்கினார் என்பதை உறுதி படுத்தும் வகையில் ரசீதுகள் எதையும் கைப்பற்றவோ அல்லது செங்கரை அரசு மதுபான கடை ஊழியர்கள் யாரையும் விசாரிக்கவோ இல்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பாட்டில்களில் மதுபானம் இருந்ததா என்பதை எனது 161(3) வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி மதுபான பாட்டில்களை எதிரி வெள்ளை நிற கட்டை பையில் வைத்திருந்ததாக சொல்லப்படும் நிலையில் மேற்படி வெள்ளைநிற கட்டை பையை கைப்பற்றி காவல் ஆய்வாளர் ஒப்படைத்தாரா என்றால் இல்லை. எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது அது அவருக்கு எதிராக பயன்படுத்தப்படகூடும் என்ற சங்கதியை காவல் ஆய்வாளர் எதிரியிடம் கூறி ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சங்கதியை எனது 161(3) வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்த தேதியில் அரசு மதுபான கடை இயங்கி கொண்டிருந்தது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எதிரியிடம் இருந்து மற்ற நபர்கள் மதுபானங்களை வாங்கி கொண்டு சென்றார்களா என்பது பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கு சொத்துக்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் ஏற்கனவே பிற வழக்குகளில் கைப்பற்றப்பட்டு காவல்நிலையத்தில் வைத்திருந்த மது பாட்டில்களை எதிரியிடம் இருந்து

கைப்பற்றியதாக கூறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயாரித்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து தயாரித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**